வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect

Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press release no: 8 Date: 06.01.2025

**V.O. Chidambaranar Port Authority achieves significant milestone in Windmill Blade Handling**

V.O. Chidambaranar Port Authority has demonstrated its unwavering commitment to supporting the renewable energy sector by achieving remarkable growth in windmill blade handling during the financial year 2024–25. Up to December 2024, the Port handled 1,869 windmill blades, reflecting a significant growth of 40% compared to the 1,332 blades handled during the same period in the previous financial year. In December 2024 alone, the Port has achieved an extraordinary milestone by handling 294 windmill blades, reflecting an exceptional growth of 234% compared to the 88 blades handled in December 2023.

The number of windmill blade & accessory handling ships have also increased considerably to 75 ships during this financial year upto December 2024, when compared to 49 ships handled during the corresponding period of last financial year, witnessing a growth of 50%.

To support this growing demand, Port offers ample area of around 1,00,000 square metres within the customs-bound area for the storage of windmill blades, ensuring secure and efficient handling of these oversized cargoes.

The Port’s infrastructure further supports efficient operations with adequate cranes for faster and safe loading, congestion-free roads facilitating timely arrival of windmill blades to the Port, seamless gate entry system providing easy access to one-dimensional cargo and skilled manpower ensuring smooth and safe loading of the windmill blades and accessories. The windmill blades and accessories manufactured at Bengaluru, Trichy, and Chennai are primarily exported to countries such as the United States, Turkey, Australia, Spain, Finland and other European nations.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, commended the efforts of Port officials, agents, transporters, and exporters for their outstanding achievement. He stated that this accomplishment reinforces VOC Port's reputation as the preferred hub for exporting windmill blades and the journey toward a greener future by promoting sustainability.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கை செய்தி எண் : 8 தேதி : 06.01.2025

**வ.உ.சிதம்பரனார் துறைமுகம் காற்றாலை இறகுகள் கையாளுவதில் மாபெரும் சாதனை படைத்துள்ளது.**

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் புதுபிக்கப்பட்ட எரிசக்தி உற்பத்தியில் தனது அர்ப்பணிப்பையும் அதன் உறுதிபாட்டையும் வெளிப்படுத்தும் வகையில் காற்றாலை இறகுகளை கையாளுவதில் சரித்திரமிக்க சாதனை புரிந்து வருகிறது. வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இந்த நிதியாண்டு 2024-25 டிசம்பர் 2024 வரை 1,869 காற்றாலை இறகுகளை கையாண்டு, கடந்த நிதியாண்டு இதே மாதம் கையாண்ட அளவான 1,332 காற்றாலை இறகுகளை விட அதிகமாக கையாண்டு சாதனைப் படைத்துள்ளது. கடந்த நிதியாண்டை ஒப்பிடுகையில் இந்ந நிதியாண்டு 40 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் டிசம்பர் மாதம் 2024-ல் மட்டும் 294 காற்றாலை இறகுகளை கையாண்டு கடந்த வருடம் டிசம்பர் 2023 மாதம் கையாண்ட அளவான 88 காற்றாலை இறகுகளை விட அதிகமாக கையாண்டு 234 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளது.

மேலும் இந்த நிதியாண்டு 2024-25 டிசம்பர் 2024 வரை 75 காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாக கப்பல்களை கையாண்டு கடந்த நிதியாண்டு டிசம்பர் மாதம் கையாண்ட 49 கப்பல்களைவிட அதிகமாக கையாண்டு 50 சதவிகித வளர்ச்சி அடைந்துள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் அதிகரித்து வரும் காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்களின் ஏற்றுமதியினை கருத்தில் கொண்டு பாதுகாப்பான முறையில் சேமிப்பதற்கு வசதியாக துறைமுகத்திற்குள் சுமார் 1,00,000 சதுர மீட்டர் நிலப்பரப்பினை வழங்கியுள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்களை கையாளுவதற்கு உள்கட்டமைப்பு வசதி, வேகமாக மற்றும் பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கு வசதியாக பளுதூக்கி இயந்திரங்களின் சிறப்பான செயல்பாடுகள், துறைமுகத்தை விரைவாக வந்தடைவதற்கு வசதியாக நெரிசல் இல்லாத சாலை போக்குவரத்து, சிறந்த முறையில் காற்றாலை இறகுகளை கையாளும் மனிதவளம், எளிமையான முறையில் பாதுகாப்பாக காற்றாலை இறகுகளை கையாளுவதில் தனித்தன்மை வாய்ந்த சிறப்பம்சங்களை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் பெற்றுள்ளது. மேலும் காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் பெங்களூரு, திருச்சி மற்றும் சென்னை ஆகிய ஊர்களில் இருந்து தயாரிக்கப்பட்டு அமெரிக்கா, துருக்கி, ஆஸ்திரேலியா, ஸ்பெயின், பின்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திரு சுசாந்த குமார் புரோகித், இ.ர.ப.மி.பொ, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் கூறுகையில் இச்சாதனை புரிவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த துறைமுக அதிகாரிகள், கப்பல் முகவர்கள், போக்குவரத்து உரிமையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் முயற்சிகளை பெரிதும் பாராட்டினார். மேலும் அவர் கூறுகையில் இச்சாதனை நிகழ்வதற்கு முக்கிய காரணியாக காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரி பாகங்களை கையாளுவதற்கு ஏதுவாக அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் சிறப்பான முறையில் பெற்றுள்ளமையால் ஏற்றுமதியாளர்களின் விருப்பமான துறைமுகமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் திகழ்வதோடு ஒரு பசுமையான வருகாலத்தை நோக்கி பயணிப்பதற்கு அதன் நிலையான தன்மையை ஊக்குவிப்பதற்கும் இச்சாதனை பெரிதும் உறுதுணையாக அமையும் என்று கூறினார்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி